01.சிறைக்கைதிகளின் ஆன்மீக மற்றும் சமயச் செலவுகள்	403,000	389,353	13,647
02.சிறைக்கைதிகளின் கல்வி மற்றும் நலனோம்பல் செலவுகள்	472,000	455,934	16,066
03.சிறைக்கைதிகளின் விளையாட்டு மற்றும் ஏனைய வசதிகள் செலவுகள்	455,000	454,816	184
04..சிறைக்கைதிகளுக்கு பரிசு வழங்கல் செலவுகள்	170,000	170,382	(382)
05.சிறைக்கைதிகள் பின் பொறுப்புச் சேவைச் செலவுகள்	-	-	-
	1,500,000	**1,470,485**	**29,515**

Annual Deposit Accounts Summary for the Month of December 2024

To
Department of Prisons (232)

From
Director General, ,
Department of State Accounts, ,
General Treasury, Colombo1. .

Printed By Alahakoon
New Table No :SA-30
Old Table No :BTBL 72
Report Date 2/27/2025 9:35:46 AM

NEW CIGAS FINAL 2024 REPORTS

Head	Code	Opn_Bal	DR	CR	Clsn_Balance
232	6000-0-0-001-0-013-0	0.00	0.00	0.00	0.00
232	6000-0-0-001-0-016-0	4,234,468.16	3,479,891.28	5,576,468.06	6,331,044.94
232	6000-0-0-002-0-014-0	0.00	0.00	0.00	0.00
232	6000-0-0-002-0-017-0	5,858,963.95	9,115,567.00	19,503,431.00	16,246,827.95
232	6000-0-0-006-0-028-0	5,683,101.66	2,724,047.82	3,768,901.93	6,727,955.77
232	6000-0-0-006-0-081-0	5,413,490.12	8,467,337.97	8,559,204.22	5,505,356.37
232	6000-0-0-008-0-001-0	13,860,072.59	0.00	0.00	13,860,072.59
232	6000-0-0-013-0-125-0	8,790,180.22	10,748,008.49	11,740,090.70	9,782,262.43
232	6000-0-0-016-0-062-0	102,923,610.92	45,883,084.37	4,470,594.76	61,511,121.31
232	6000-0-0-018-0-075-0	1,099,330.03	4,156,321.94	4,315,726.39	1,258,734.48

This is a computer-generated document. No signature is required.
Report Generated by the new CIGAS Web Application--Developed by S.Tharshan - Director, Dept of State Accounts.
-

3.2. குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைப் (காணப்படுமாயின்) பயன்படுத்தல் செயலாற்றுகை

ரூபா. ,000

ஒதுக்கீட்டு வகை	குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, முடிக்கப்பட்டஇறுதி ஒதுக்கீட்டுத். தொகையின் % ஆக
	அரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	1,500,000.00		1,420,504.96	98.03%
மூலதனம்			49,980.00	

3.3 நன்கொடைகள் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் தொடர்பான செயலாற்றுகை – நன்கொடை அடிப்படையில் நிதி கிடைக்கப்பெறவில்லை

நன்கொடை வழங்கிய நிறுவனம்	நன்கொடைக்கான நோக்கம்	நன்கொடைத் தொகை
-	-	-

3.4 நிதி அல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை - இந்த நிதியத்திற்கு ஏற்புடையது அல்ல.

ரூ. ,000

ஆதனக் குறியீடு	குறியீட்டு விபரம்	2024.12.31 ஆம் திகதிக்கு பண்டக் கணக்கெடுப்பு அறிக்கையின் படி மீதி	2024.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை கூற்றின் படி மீதி	எதிர் காலத்தில் கணக்கிடப்பட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள்				
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்				
9153	காணிகள்				
9154	அருவச் சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைபெறும் வேலைகள்				
9180	குத்தகைச் சொத்துக்கள்				

3.5 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.**

** பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் போது, கணக்காய்வாளர் அதிபதி அவர்களினால் வெளியிடப்பட்ட இறுதிக் கணக்காய்வு அறிக்கை ஸ்கேன் செய்யப்பட்டு (SCAN) இதில் உட்சேர்க்கப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அலுவலகம்.

எனது இல. : JLO/C/C/DEP/FD/2024 2025 மே 30 ஆம் திகதி

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்.
சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதியம்.

சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பளியுள்ள கருத்துரை

சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அளவு ரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களைக் கொண்ட 2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் கண்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படையான பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் தவிர, நிதியத்தின் நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படை

(அ) சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் கணக்கியல் கொள்கைகளின் பிரகாரம் நிதியத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்கள் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் மூலம் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்ற போதிலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதிக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூபா 17,351,040 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்களில், ரூபா 11,565,309 பெறுமதியான நடைமுறையல்லாத சொத்துக்கள் 2024 ஆம் ஆண்டிற்கான சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களில் உட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நன்கொடையாகப் கிடைக்கப் பெற்ற ரூபா. 2,446,160 பெறுமதியான நன்கொடைகள் நிதிக் கூற்றுக்களில் உட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை

(இ) சிறை வேதனம் மற்றும் வைப்புத் தொகைக்கான பொது வைப்பு கணக்கில் ஒரு வருடத்திற்குக் குறையாத காலத்தினுள் உரிமை கோரப்படாத வேதனம் மற்றும் தனிப்பட்ட காசு மீதி 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 2,173,030 ஆகக் காணப்பட்டது. அந்த மீதியில் சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்குக் குறைவான காலத்திற்குள் உரிமை கோரப்படாத ரூபா. 1,000,805 பெறுமதியான தொகை , 1979 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதிய திருத்தச் சட்டத்தின் 4 (அ) பிரிவின் பிரகாரம் நிதியத்தில் வரவு வைப்பதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அனுராதபுரம் சிறைச்சாலையில் இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதியில் ரூபா. 128,155 மீதி தவறுதலாக அரசாங்க வருமானத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(உ) மஹர சிறைச்சாலையின் கைத்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக தனியார் நிறுவனம் ஒன்றினால் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்து சிறைச்சாலை ஊதியத்திலிருந்து கட்டாயக் கட்டண அறவீடாக சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதியத்துக்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 230,760 தொகை 2024 நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய (இ.க.நி) என்னால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சிகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்புக்கள்.

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொய்யான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தை தொடர்ச்சியாகப் பேணிச் செல்லும் சாத்தியப்பாட்டைத் தீர்மாணித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு என்பதோடு, முகாமைத்துவம் நிதியத்தை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கின்றதெனில் அல்லது வேறு மாற்றீடொன்று இல்லாத போது செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதெனில் தவிர, தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் அடிப்படை மீது கணக்குகளைப் பேணுதல் மற்றும் நிதியத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கான விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடுகள் தொடர்பாகப் பரீட்சிக்கும் பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆவது பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் சமகால நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமான விதத்தில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு ஏடுகளையும் மற்றும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு.

மொத்தமாக நிதிக் கூற்று, ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பொய் கூற்றுக்களைக் கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்துரை உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடு இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன், அந்த பொருண்மையான தன்மை இந்த நிதிக் கூற்றை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வுக்கான அபிப்பிராயம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பொய்க் கூற்றுக்களின் ஆபத்தை இனங்கண்டு கொள்ளுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குகுள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையாகக் குறிப்பிடுதல் காரணமாக ஏற்படும் பொருண்மையான பொய் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.
- உள்ளக நிர்வாகத்தின் பயன் தருதன்மை சம்பந்தமாகக் கருத்தைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை என்ற போதிலும் சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தை தொடர்ச்சியாகப் பேணுதல் தொடர்பாக ஐயப்பாடுகள் உள்ளதா என்பது தொடர்பில் பெறப்பட்ட கணக்காய்வுச் சாட்சியங்கள் மீது அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிதியத்தை தொடர்ச்சியாகப் பேணுதல் தொடர்பான அடிப்படைகளை பயன்படுத்துதல் பொருத்தப்பாடு தீர்மாணிக்கப்பட்டது. போதுமான ஐயப்பாடுகள் உள்ளதென நான் முடிவு செய்வதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு, அந்த வெளிப்படுத்தல்கள் போதுமற்றவையெனில் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ச்சியாகப் பேணிவருதல் முடிவடைய முடியும்.
- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட மொத்தமாக நிதிக் கூற்றுக்களின் முன்வைப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்கண்டு கொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக நிருவகிக்கின்ற தரப்பினர்களை அறிவுறுத்தினேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய இந்த அறிக்கையின் முனைப்பளியுள்ள கருத்துரைக்கு அடிப்படையான பகுதியில் 1.2 (அ), (ஆ) இல் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர, கடந்த ஆண்டிற்குரியதாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை.

சட்டங்கள், விதிகள்/ கட்டளைகளுக்கான தொடர்பு	இணங்காமை / இணக்கமின்மை.
01 / 2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதி	
(i) நிதி ஒழுங்கு விதி 877 (2) (அ) பந்தி	நிதியத்துக்காக தனியான ஒரு வங்கிக் கணக்கு பேணப்படல் வேண்டும் என்ற போதிலும், சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2023 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுச் சந்தர்ப்பத்தின் போது இந்த நிதியத்துக்காகத் தனியான ஒரு வங்கிக் கணக்கைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினமான 2025 ஏப்ரல் 08 ஆம் திகதி வரையிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) நிதி ஒழுங்கு விதி 877 (2) (இ) பந்தியின் வழிகாட்டல் 04	ஒவ்வொரு காலாண்டின் இறுதியில் நிதியத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்ய முடியுமான அடிப்படையில் முக்கியமான பணிகள் தொடர்பான காலாண்டு ரீதியான அறிக்கைகள், அந்தக் காலாண்டு நிறைவடைந்து 15 நாட்களுக்கு முன்னர், அரச நிதித் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு பிரதிகள் சகிதம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்ற போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

3.2. முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) நிதியத்தின் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் வருமானமாக இனம் காணப்பட்ட ரூபா 2,760,537 தொகையில், ரூபா 1,575,675 ஏனைய பங்களிப்புத் தொகை கிடைப்பனவாகக் காட்டப்பட்டுள்ளது. சட்டத்தின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வருமான வழிகளின் கீழ் வருமானத்தைச் சேகரிப்பதற்கான முறையான வழிமுறை ஒன்றைக் கண்டறிந்து செயற்படுத்துவது தொடர்பில் முறையான கவனம் செலுத்தப்படாமை காரணமாக, வருமானத் தலைப்பின் அடிப்படையில் கிடைப்பனவு பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள 30 சிறைச்சாலைகள் நிறுவனங்களில் 14 நிறுவனங்களில் 2024 ஆம் ஆண்டினுள் எந்தவிதமான வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை. அதன் படி, மஹர மற்றும் தங்காலை சிறைச்சாலைகள் நிறுவனங்களுக்காக 2024 ஆம் ஆண்டினுள் சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதியில் இருந்து அதிக செலவினங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனங்கள் வருமானத்தைச் சேகரிப்பதற்கான எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதியின் கிடைப்பனவுகளின் கீழ், 2024 ஆம் ஆண்டினுள் வியாபார நிலையங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற தேறிய இலாபமாக திருகோணமலை சிறைச்சாலையினால் உழைத்த ரூபா 7,764 மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, மீதமுள்ள சிறைச்சாலை நிறுவனங்கள் மூலம் எந்த விதமான பணமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு அமைய , வியாபார நிலையங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானம் ரூபா 225,871 ஆகக் காணப்பட்ட போதிலும், இது மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நூற்றுக்கு 97 சதவீதம் குறைவாகும். மேலும், கண்காட்சிகள் மற்றும் உணவகங்களிலிருந்து 2024 ஆம் ஆண்டில் முறையே ரூபா 4,000 மற்றும் ரூபா 2,500 உழைப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டினுள் எந்த விதமான வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை என்பதோடு பொழுதுபோக்கு பொருட்கள் விற்பனை மூலம் பெறப்பட்ட வருமானமும் ரூபா 1,750 என்ற குறைவான ஒரு தொகையாகக் காணப்பட்டது.

(இ) குறுகிய கால மற்றும் நீண்ட காலப் பணி நிவாரண / வேலை உதவி முறையொன்றின் கீழ் சிறைக் கைதிகளைப் பணியில் ஈடுபடுத்தியதன் மூலம் உழைத்த வருமானத்தில் நூற்றுக்கு 10 சதவீதம் சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதியத்துக்கு வழங்கப்படல் வேண்டும். 2024 ஆம் ஆண்டில், இந்தத் முறை வெலிக்கடை மற்றும் வட்டரெக்க சிறைச்சாலை நிறுவனங்களில் மாத்திரம் செயற்படுத்தப்பட்டுள்ளதோடு, நிதியத்துக்கு ரூபா. 139,286 தொகை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் , பணி நிவாரண / வேலை உதவி முறையொன்றின் கீழ் வருமானம் ஈட்டக் கூடிய வழிகளை விஸ்தரிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3. செயலாற்றுகை

நடைமுறை ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தின் படி, பரிசுகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டங்களில் செயற்படுத்தப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 54 ஆகக் காணப்பட்டதோடு, பரிசுகள் வழங்கப்பட்ட சிறைக் கைதிகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 36 ஆகக் காணப்படடது.

ஒப்பம்/ ஆங்கிலத்தில்,

ஜீ.எச்.டி. தர்மபால

கணக்காய்வாளர் தலைமை அதிபதி. (ப.க)

4.1 நிதியத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் - 2023 (செயல் / அமுலாக்கல் திட்டத்தின் அடிப்படையில்)

விசேட குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மை வெளியீடு		
	100%- 90%	**75%-89%**	**50%- 74%**
கைதிகளை ஆன்மீக மற்றும் சமய நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொள்ளச் செய்வதற்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் சதவீதம்.	96.61%		
கைதிகளின் கல்வி மற்றும் நலனோம்பல் அலுவல்களுக்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் சதவீதம்.	96.59%		
கைதிகளின் விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தல் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் சதவீதம்.	99.95 %		
பல்வேறுபட்ட திறமைகளைக் கொண்டுள்ள கைதிகளுக்காக அவர்களின் திறமைகளைப் பாராட்டி கௌரவிப்பதற்காக பரிசில்களை வழங்குவதற்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் சதவீதம்.	100.22		
கைதிகளின் பின் பொறுப்பு அலுவல்களுக்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் சதவீதம்.	-		

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக - இந்த நிதியத்திற்கு ஏற்புடையது அல்ல.

.

இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	அடைவுக் குறி காட்டிகள்	இலக்கு / குறிக்கோள்			இலக்குகள்	அடைவுக் குறி காட்டிகள்
			0%-49%	50%-74%	75%-100%		

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல் வெற்றிகளையும் மற்றும் சவால்களையும் சுருக்கமாக விபரிக்குக.

06.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் - இது நேரடியாக ஏற்புடையதல்ல என்பதோடு, இந்த நிதியத்திற்குத் தணியான பணியாட் குழுவொன்று இல்லை. திணைக்களத்தின் அலுவலர்கள் இதில் பணியாற்றுகின்ற காரணத்தால் அலுவலர் வெற்றிடங்கள் இல்லை.

	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	**காணப்படுகின்ற/ பணியில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை**	**வெற்றிடங்கள் / (மிகை)****
சிரேட்ட			
மூன்றாம் நிலை			
இரண்டாம் நிலை			
ஆரம்ப நிலை			
ஒப்பந்த/அமய			

06.2 ** நிதியத்தின் செயலாற்றுகைக்கு மனித வளப்பற்றாகுறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது என்பதை சுருக்கமாக குறிப்பிடுக. - ஏற்புடையதது அல்ல.

06.3 மனித வள அபிவிருத்தி - இந்த நிதியத்திற்கு ஏற்புடையது அல்ல.

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	**பயிற்றப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை**	**நிகழ்ச்சித் திட்டக் காலப் பகுதி**	**மொத்த முதலீடு (ரூபா '000)**		**நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு ∴ சுபாவம் (உள் நாட்டு / வெளி நாட்டு)**	**வெளியீடு / பெற்றுக் கொண்ட அறிவு ***
			உள் நாட்டு	**வெளி நாட்டு**		

* நிறுவனத்தின் செயலாற்றுகையை அதிகரிக்கச் செய்வதற்குப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதை சுருக்கமாக விளக்கு – ஏற்புடையது அல்ல.

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அது பற்றி சுருக்கமாக விபரிக்குக	இணக்கமற்றதினை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கைகள் யாவை
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.6	ஏனைய	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி. ஒ. விதி . 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267 / 2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.2	ஆள்சார் வேதனாதிகள் ஆவணம் / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் அவணத்தை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.7	பொருட் பதிவேட்டினை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.8	இருப்புப் பதிவேட்டினை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.9	இழப்புக்கள் பதிவேட்டினை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.10	பொறுப்புக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.11	அடியிதழ் புத்தகங்களின் (GA - N20) பதிவேட்டை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		

03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி . 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் அதிகாரங் பகிரப்பட்டிருத்தல்	-		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் அறிவுறுத்தப்பட்டிருத்தல் / தெரியப்படுத்தப்பட்டது	-		
3.3	ஒவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம் பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	-		
3.4	2014.05.11 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 171 / 2004 இன் படி, அரச ஊதிய மென் பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக செயற்படுத்தப்படல்	-		
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த அமுலாக்கல் ∴ செயல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது.		
4.2	வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரித்தல	-		
4.3	மீளாய்வு வருடத்திற்காக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் வரவு செலவுத் திட்டம் அனுமதிக்கப்பட்டிருத்தல்	-		
4.4	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	-		
4.5	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	-		
4.6	வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்று திறை சேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	-		
4.7	காலண்டு அறிக்கைகள் திறை சேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	-		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் குறிப்பிட்டுள்ள திகதிகளில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது.		
6	**உள்ளகக் கண்காய்வு**			
6.1	நி. ஒ. விதி 134 (2) டி.எம்.ஏ / 1 - 2019 படி , ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்	-		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	-		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளையும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உப பிரிவு 40 (4) இன் அடிப்படையில் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.	-		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளையும் நிதி ஒழுங்கு விதி 134 (3) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	-		

7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டி எம் ஏ 1 - 2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி ஆண்டினுள் ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருத்தல்	-		
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	01 / 2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்திக்கு அமைய சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் புறத்தொதுக்கல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	-		
8.2	மேற் குறித்த சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய பொருத்தமான அதிகாரியை நியமனம் செய்து அந்த அலுவலரது தகவல்கள் கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருத்தல்	-		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல. 05 / 2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	-		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியினுள் வருடாந்த பண்டக் கணக்கெடுப்பு மூலம் மிகையான / அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	-		
8.5	நிதி ஒழுங்கு விதி. 772 இன் படி தீர்தொதுக்கப்பட்ட பொருட்களை புறத் தொதுக்கல் செய்யப்பட்டது	-		

9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழாம் வாகனங்களுக்கான தினசரி ஓட்ட அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல	-		
9.2	தீர்த்தொதுக்கப்பட்ட / கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு (06) மாதங்களுக்கு குறைவான காலப்பகுதியினுள் புறத்தொதுக்கப்பட்டிருத்தல்	-		
9.3	வாகன பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் அவை புதுப்பிக்கப்பட்டு பேணி வருதல் வேண்டும்	-		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி .ஒ. வி 103, 104, 109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்	-		
9.5	2016.12.29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016 / 30 இன் பத்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் தகனத்தை / பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	-		
9.6	குத்தகை வாகனங்களின் குத்தகைக் காலத்தின் பின்னர் உரித்து பதிவு புத்தகம் மாற்றப்பட்டிருத்தல்	-		

10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	-		
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முந்திய வருடங்கள் தொடக்கம் முன்கொண்டு வரப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	-		
10.3	வங்கி கணக்கிணக்க கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரி செய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	-		
11	**நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்.	இணக்கமானது		
11.2	நி. ஒ. விதி. 94 (1) இன் படி ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்ட பின்னர் வருட இறுதியில் மீதி ஒதுக்கீடு வரம்பை மீறாதவாறு பொறுப்புக்கள் காணப்படல்.	இணக்கமானது		

12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	-		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவைகள் குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	-		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் மீதிகளைத் தீர்த்தல்/ செலுத்தி முடித்தல்	-		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நிதி ஒழுங்கு விதி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	-		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை இற்றைப்படுத்தல் மற்றும் பேணி வருதல்	-		

14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	-		
14.2	நிதி ஒழுங்கு விதி .371 இன் அடிப்படையில் ஒரு நிமித்த பணிக்கான உப கட்டு நிதி வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்	-		
14.3	நிதி ஒழுங்கு விதி 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாதவாறு ஒரு நிமித்த இடைக்கால கட்டு நிதி வழங்கல்	-		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதிகள் கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	-		
15	**வருமானக் கணக்குகள்**			
15.1	குறித் ஒழுங்கு விதிகளின் படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருத்தல் வேண்டும்	-		
15.2	திரட்டப்பட்ட வருமானம், வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்	-		
15.3	நதி ஒழுங்கு விதி - 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	-		

16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பேணி வருதல்	-		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட கடமைப் பட்டியல்களை வழங்குதல்	-		
16.3	2017.09.20 ஆம் திகதிய எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04 / 2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	-		
17	**பொது மக்களுக்கான தகவல்களை வழங்கல்**			
17.1	தகவலறியும் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அலுவலர் ஒருவரை நியமித்தல். தகவல் வழங்கும் ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	-		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்களை அதன் வலைத் தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத் தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனம் தொடர்பான பொது மக்களின் பாராட்டுக்கள் / குற்றச்சாட்டுகளை வெளியிடுவதற்கான வசதிகளைச் செய்திருத்தல்.	-		

இணைப்பு

தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியம்.

(1973 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1973 ஆம் மாதம் 18 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தாமனப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியம்.

(1973 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

எல்.டீ. – ஓ. 2/73

மறியற்காரர்கள் நலன்புரி நிதியமொன்றைத் தாபிப்பதற்காகவும் மறியற்காரர்களின் பொது நலனுக்காக அந்த நிதியத்திலிருந்து நிதியைச் செலவு செய்வதற்காகவும் ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் அதனுடன் தொடர்புடைய அல்லது இடைநேர் விளைவான அனைத்து விடையங்களுக்குமான ஏற்பாடுகளைச் செய்வதற்கான ஒரு சட்டம்.

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக : -

சுருக்கப் பெயர்

1.இந்தச் சட்டம், தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியத்தைத் தாபித்தல்

2 (1) இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியம் என எடுத்துக்காட்டப்படுகின்ற ஒரு நிதியம் தாபிக்கப்படும்.

(2) நிதி விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் அவர்களினால் விதிக்கப்படக்கூடிய விதத்தில் நிதியத்தின் பொதுக் கணக்கொன்று பேணிவரப்படுதல் வேண்டும்.

நிதியத்தின் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம்

3. நிதியத்தின் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் மறியற்சாலைகள் ஆணையாளர் நாயகம் அவர்களுக்குக் கையளிக்கப்படும்.

நிதியத்திற்குச் செய்யப்படுகின்ற கொடுப்பனவுகள்

4. கீழே குறிப்பிடப்படுகின்ற நிதிகள் நிதியத்தின் கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

(அ) இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தினத்தில் மறியற்சாலைகள் திணைக்களத்தின் கணக்குப் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ளவாறு "மறியற்காரர்கள் நலன்புரி நிதியத்தின் பொது வைப்பு நிதிக் கணக்கில்" வரவு வைக்கப்பட்டுள்ள சகல நிதிகளும்;

(ஆ). பொழுதுபோக்குப் பொருட்கள் விற்பனை மூலம் கிடைக்கின்ற தேறிய பெறப்பட்ட தொகையில் செயலாளரினால் காலத்திற்குக் காலம் தீர்மாணிக்கப்படக் கூடிய பகுதி ;

(இ). மறியற்காரர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட கட்டாய அறவீடு;

(ஈ). மறியற்காரர்களின் நலன்புரிக்காக பொதுமக்களினால் செய்யப்படுகின்ற ஏதேனும் நன்கொடைகள் ;

(உ) மறியற்சாலைகள் தொழிலாளர்களின் சேவை வழங்களுக்காக அறவீடாக அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்து அறவிடப்படுகின்ற ஏதேனும் நிதி;

(ஊ) அங்கீகாரம் பெறப்படாமல் மறியற்காரர்கள் தம்வசம் வைத்திருந்து, கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை;

(எ) மறியற்சாலை நிலையங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட உரித்து உறுதி செய்யப்படாத ஏதேனும் பணத்தொகை;

(ஏ). (i). மறியற்சாலைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற விற்பனை அறைகள் மூலம்.

(ii). மறியற்கார்களினால் தயாரிக்கப்பட்ட பொழுதுபோக்குப் பொருட்களைக் காட்சிப்படுத்துவதன் மூலம், மற்றும்

(iii). மறியற்சாலைகளில் நடாத்தப்படுகின்ற உணவகங்களிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற தேறிய இலாபம் ; மற்றும்

(ஐ) நிதி விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கக் கூடிய நிதியத்திற்குக் கிடைக்கப்பெறுகின்ற வேறு உதவித் தொகைகள்.

நிதியத்திலிருந்து நிதியைச் செலவு செய்தல்

5. நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள நிதிகள் செயலாளரினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கமைய கீழேயுள்ள பணிகளில் ஏதேனும் ஒன்றுக்காகச் செலவு செய்வதற்கு மறியற்சாலைகள் ஆணையாளர் நாயகம் அவர்களுக்கு அதிகாரம் உள்ளது :-

(அ). மறியற்காரர்களின் ஆண்மீக மற்றும் சமய நலன்களுக்காக,

(ஆ). மறியற்காரர்களின் கல்வி நலன்களுக்காக,

(இ). மறியற்காரர்களுக்கான பொழுதுபோக்கு விளையாட்டு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்காக,

(ஈ). மறியற்காரர்களுக்குப் பரிசில்களை வழங்குவதற்காக,

(உ) கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் மறியற்காரர்களுக்காக உணவகங்களைப் பேணிச் செல்வதற்காக , மீளச் செலுத்தக்கூடிய முற்பணங்களை வழங்குதல்.

நிதியாண்டு

6. நிதியத்தின் நோக்கங்களுக்கான நிதியாண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதியில் ஆரம்பித்து திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஒரு வருடமாகும்.

கணக்கு மற்றும் கணக்காய்வு

7 (1) நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு நிதி வருடமும் நிறைவடைந்த பின்னர் இயன்றளவு விரைவாக நிதியத்தின் அலுவல்கள் நிறைவேற்றப்பட்ட முறையைக் காட்டக்கூடியவாறானதும், நிதியத்தின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களினதும் முழுமையான விபரங்கள் உள்ளடக்கப்பட்டதுமான முழுமையான கூற்றொன்று மறியற்சாலைகள் ஆணையாளர் அவர்களினால் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையின் பிரதியொன்று சகிதம் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அமைச்சர் அவர்கள் முடியுமான கதியில் அவ்வறிக்கையைத் தேசிய அரசுப் பேரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பொருள் கோடல்

8. இந்த அறிக்கையில் " செயலாளர் " என்பது மறியற்சாலைகள் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.



இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

1979 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, மறியற்சாலைகள் திணைக்களம் — மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் (திருத்தச்) சட்டம்.

[1979, ஒகத்து மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1979, செத்தெம்பர் மாதம் 07 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 20 தபாற் செலவு : சதம் 25

1979 ஆண்டின் 54 ஆம் இலக்க, மறியற்சாலைகள் திணைக்களம்—மறியற் காரர்கள் நலன்புரி நிதியச் (திருத்தச்) சட்டம்

[1979, ஒகத்து மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—இ. 79/75

1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, மறியற்சாலைகள் திணைக்களம்—மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது, 1979 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, மறியற் சாலைகள் திணைக்களம்—மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) 1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, மறியற்சாலைகள் திணைக்களம்—மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அஅ) எவரேனும் மறியற்காரர் விடுதலைசெய்யப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்குக் குறையாதவொரு காலத்திற்குக் கோரப்படாமல் இருப்பதும், பொது வைப்பு—மறியற்காரர்களின் கூலிகளும், தனிப்பட்ட காசும் எனும் கணக்கில் அத்தகைய மறியற்காரரின் வரவிலுள்ளதுமான அத்தகைய ஏதேனும் பணத்தொகை ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அப்பிரிவின் முடிவில் காணப்படும் முற்றுப்புள்ளிக்குப் பதிலாக அரைப்புள்ளியொன்றை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ii) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஊ) மறியற்காரர்களை மறியற்சாலையிலிருந்து விடுவித்த பின்னர் அவர்களின் புனர்வாழ்விற்கு உதவக்கூடிய அத்தகைய பிற்பாட்டுக் கவனிப்புச்சேவைகள்.".